2023 அக்டோபர் 11]

பகுதியில்தான் பணியாற்றினோம். அங்கே சாலை வசதியும், பேருந்து வசதியும் அவசியம் என்பதை அப்போதே உணர்ந்திருக்கின்றோம். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணையோடு அங்கே சாலை வசதி அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வழக்கமாக ஓடுகின்ற பேருந்துகளை அங்கே இயக்கமுடியாது. Short wheel base *என்ற குறுகிய அடித்தளச் சட்டமுள்ள பேருந்துகளைத்தான் இயக்கமுடியும். அந்தப் பேருந்துகள் தற்போது கைவசம் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, வத்தல்மலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் பேருந்து வசதி கேட்டு மக்கள் கோரிக்கை வைத்தார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேருந்து வசதி இல்லாத பகுதிகளில் பேருந்து இயக்குவதற்கு உத்தரவிட்டு, அங்கே பேருந்து இயக்கப்பட்டிருக்கிறது. அதேபோல வருங்காலங்களில் புதிய பேருந்துகள் வந்தவுடன் அவருடைய பகுதிக்கும் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

228—

தங்கும் விடுதி

***15590—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தகிரி மலை என்பது 365 படிகளைக் கொண்டது. அந்த மலைக்கு கடந்த 14–9–2023 அன்று நேரடியாக ஆய்விற்குச் சென்றிருந்தேன். இந்தப் பகுதி என்பது வனச் சரகத்திற்குட்பட்ட,*

வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அமைந்திருப்பதால் இந்த இடத்தில் நீங்கள் கோரிய கோரிக்கையான தங்கும் விடுதி கட்டித்தருகின்ற வாய்ப்பு இல்லை என்பதை வருத்தத்தோடு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியிலே 7.5 சதவிகித இடஒதுக்கீடு தந்த எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்ற வார்த்தையை மாற்றி, உயர் கல்வியிலே முன்னேறிய மாவட்டமாக இடம்பெறச் செய்த, பாலக்கோடு சட்டப் பேரவை உறுப்பினர், கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர், எதிர்க்கட்சிச் செயலாளர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருக்கோயிலுக்கு வருகை தந்தார்கள். இதிலுள்ள சிரமம் என்னவென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 10 ஏக்கர் நிலம் RF*–க்கு சொந்தமானது அல்ல, கோயிலுக்குச் சொந்தமானது என்று 1893–ல்* British Government *அறிவித்திருக்கிறது. இப்போது நிதி ஒதுக்கி, படிக்கட்டுகள் சீரமைப்புப் பணி, தரைத் தளம் சீரமைப்புப் பணி, கோயில் புனரமைக்கும் பணியில் கொடையாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இரவு நேரங்களில் தங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். வனத் துறையுடன் கலந்தாலோசித்து ஆணையைப் பிறப்பித்து, தங்கும் விடுதி கட்டித்தர வேண்டும். அதேபோல தாங்கள் அங்கே படி ஏறும்போது சிவபெருமான் எப்படி உங்களை அங்கு அழைத்தாரோ, அதேபோல தார்ச் சாலை அல்லது* winch *வசதி ஏற்படுத்திக் கொடுக்க அன்போடு கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 222 இலட்சம் ரூபாய் செலவில் கிட்டத்தட்ட 16 சன்னதிகளை புதுப்பிக்கின்ற திருப்பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல் அந்த வனப் பகுதியில் தீர்த்தகிரீஸ்வரரை தரிசனம் செய்ய பயன்படுத்துகின்ற 365 படிகளுக்கு பாதுகாப்புச் சுவர், தரைத் தளம் அமைக்கின்ற பணி மற்றும் கருங்கற்களால் படிகள் அமைக்கின்ற பணிகளுக்கு, வனத் துறையிடம் அனுமதி கேட்டு* PARIVESH portal*–ல் விண்ணப்பித்திருக்கின்றோம். வனத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசியிருக்கின்றோம். இந்த ஆய்வு முடிந்தபிறகு, வனத் துறையிடமிருந்து கூடியவிரைவில் அனுமதி பெற்றுத் தரப்படும் என்ற உறுதியை அளித்திருக்கின்றார். ஆகவே, அடுத்த மாதத்திற்குள்ளாக கருங்கல்லில் படி அமைக்கின்ற பணி, சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணி, தரைத் தளம் அமைக்கின்ற பணி என அனைத்துப் பணிகளும் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோயிலின் கீழ்கோயிலில் வருடத்திற்கு 250 திருமணங்கள் நடைபெறுகின்றன. அங்கு திருமணத்திற்கு வருகின்றவர்கள் உணவு அருந்துவதற்கு வசதிகள் இல்லை. அங்கே இடம் இருக்கின்றது, அங்கு சமையலறையுடன்கூடிய உணவுக்கூடம் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, கீழ்கோயில் இராஜகோபுரம் இடிந்த நிலையில் நீண்ட நாட்களாக இருக்கிறது. புதியதாக ஒரு இராஜகோபுரம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மீண்டும் அரூர் வரனீஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி மேற்கொள்வதற்காக soil test *முடிவுகள் இணை ஆணையர் அவர்களுக்குச் சென்றிருக்கிறது; அதற்கு ஆணை வழங்கவேண்டும். கோயில் கட்டுவதற்கு நிதியளிக்க உபயதாரர்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்கும் கூடியவிரைவில் ஆணை பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல், மொரப்பூர் சிங்காரத்தோப்பு முனீஸ்வரர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். அங்கே, புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பக்தகோடிகள் அசைவ விருந்து வைத்து தெருக்களிலே அமர்ந்து உணவருந்தும் நிலை இருக்கின்றது. அதன் மேற்கூரைகள் எல்லாம் இடிந்து இருக்கின்றன. அந்த மேற்கூரைகளைப் புனரமைக்க வேண்டுகிறேன். மொரப்பூர் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள திருமண மண்டபத்தில் சமையற்கூடம் இல்லை. அந்தத் திருமண மண்டபத்தில் புதிதாக சமையற்கூடம் கட்டித்தரவும், அரூர், மஞ்சவாடி கணவாய் வெள்ளையப்பன் கோயிலில், ஓர் உணவருந்தும் கூடம் கட்டித்தரவும் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலாக சொல்ல விரும்புவது, இந்த ஆட்சி இன்னார் இனியவர் என்று பார்க்காமல், கேட்கின்ற திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகளை வாரி வழங்கியிருக்கின்ற அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைமையிலிருக்கின்ற இந்த அரசு. 17 திருமண மண்டபங்கள் ரூ.41 கோடி செலவில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல், 71 திருமண மண்டபங்கள் ரூ.242 கோடி செலவில் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் கோரிய தீர்த்தகிரீஸ்வரர் மலைக் கோயிலின் கீழ்தளத்தில் இருக்கின்ற இடத்தில், தனியாருக்குச் சொந்தமான இடங்கள்தான் அதிகளவு இருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த அந்தத் திருக்கோயிலுக்கு சுற்றுப் பிரகாரத்தில் யாராவது தானமாகவோ அல்லது விலைக்கோ அந்த இடத்தைத் தர முன்வந்தால் நிச்சயமாக உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தரப்படும்.

அதேபோல், முனீஸ்வரர் கோயிலுக்கு திருமண மண்டபம் கேட்டிருக்கிறீர்கள். அங்கு ஏற்கெனவே, 2005 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு திருமண மண்டபம், 120 பேர் தங்குகின்ற அளவிற்கு

2023 அக்டோபர் 11]

இருக்கின்றது. அங்கு Asbestos sheet *போடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக* concrete *தளத்தில் மாற்றி, அந்தத் திருமண மண்டபம் புதுப்பித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இளம் பிராயத்திலே துணிச்சலோடு கமலாலயத்தை நீந்திக் கடந்தார்கள். இன்றைய முதல்வர் அவர்கள் கமலாலயத்தைக் கடந்து செல்லும்போதெல்லாம், ஆள், அரவமற்ற ஒரு நிலையைப் பார்த்துச் செல்லும் சூழ்நிலை உள்ளது. அந்தக் கமலாலயக் குளம், திருவாரூருக்கு ஓர் அடையாளமாக உள்ள தேர் சுற்றிவரும் நிலை இருக்கிறது. ஏற்கெனவே, முன்பெல்லாம் சுற்றுலாத் துறையின் சார்பாக அந்தத் தெப்பக் குளத்தில் படகுப் போக்குவரத்து இருந்தது; இப்போது இல்லை. இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் சார்பாக கமலாலயத்தில் படகு சவாரி செய்ய ஏற்பாடு செய்வதோடு, மிதவைப் பூங்காவையும் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின்போது, சுற்றுச்சுவர் படிக்கட்டுகள் இடிந்து விழுந்ததால் சாலைகள் சேதம் அடைந்திருந்தபோது, ஆழித் தேரோட்டத்திற்கு 20 நாட்கள்தான் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதன் நிலையை அறிந்து உடனடியாக, நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து இந்த ஆண்டு ஆழித்தேர் ஓட வேண்டுமென்று உத்தரவிட்டார். 15 தினங்களிலேயே அந்தச் சாலையை மேம்படுத்தி, ஓடுமா, ஓடாதா என்ற கேள்வியோடு இருந்த ஆழித்தேரோட்டத்தை நடத்திய பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் படகு சவாரி குறித்த கோரிக்கை சுற்றுலாத் துறை தொடர்பாக உள்ளதால்*

சுற்றுலாத் துறையோடு கலந்துபேசி, வாய்ப்பிருந்தால் சுற்றுலாத் துறையின் மூலமாகவோ அல்லது இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலோ உறுப்பினருடைய விருப்பம் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் வீரணாமூர் அகஸ்தீஸ்வரர் கோயில் இடிபாடுகளோடு இருக்கிறது. இக்கோயில் மன்னர் காலத்துக் கோயில். இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற இதுபோன்ற பொக்கிஷங்களான 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு உத்தரவிட்டதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் என 714 திருக்கோயில்கள் இருப்பதாக பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக போதிய நிதியாதாரங்கள் அத்திருக்கோயில்களில் இல்லாத நிலையை அறிந்து, இதுவரையில் ஆண்ட ஆட்சிகளில், எந்த ஆட்சியிலும் ஒதுக்காத அளவிற்கு 2022–2023 ஆம் ஆண்டு மானியமாக ரூ.100 கோடி நிதியை ஒதுக்கிய பெருமை எங்களுடைய மாண்புமிகு முதல்வரைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

2022–2023 ஆம் ஆண்டில் நிதியை ஒதுக்கிவிட்டோம் என்றில்லாமல், 2023–2024 ஆம் ஆண்டில் மீண்டும் ரூ.100 கோடி நிதியை அரசின் சார்பில் ஒதுக்கிய பெருமை எங்களுடைய

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு முதல்வரைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.200 கோடி நிதியை ஒதுக்கியதன் விளைவாக, உபயதாரர்கள் மேலும் ரூ.120 கோடி நிதியை திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நன்கொடையாக வழங்கியிருக்கின்றார்கள். இந்த ஒட்டுமொத்த நிதியில் 187 திருக்கோயில்கள் திருப்பணிகள் மேற்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலும் அந்தப் பட்டியலில் அடங்கும் என்று கருதுகின்றேன். இல்லையென்றாலும், இந்தத் திருக்கோயிலையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொண்டு, திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள, கொடைக்கானல் மேல்மலை, பூம்பாறை கிராமத்தில் அமைத்திருக்கக்கூடிய சித்தர் போகர் அவர்களால் வடிவமைக்கப்பட்ட தசா பாஷான முருகன் சிலை அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயிலின் இராஜகோபுரத்தை மீண்டும் புதுப்பித்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

அதோடுமட்டுமின்றி, அத்திருக்கோயிலுக்கு, வாரத்திற்கு கிட்டத்தட்ட 20,000, 25,000 பக்தர்கள் வருகின்ற சூழல் உருவாகியிருக்கிறது. மேலும், சுபமுகூர்த்த தினங்களில் நிறைய திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கே ஒரு திருமண மண்டபமும், திருக்கோயிலின் இராஜகோபுரத்தைப் புதுப்பித்துத் தருகிற பணியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்பாறையிலுள்ள திருக்கோயில் இராஜகோபுரத்தைக் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார். இந்த ஆட்சி ஏற்பட்ட*

பிறகு, 9 நிலை, 7 நிலை, 5 நிலை என 36 இராஜகோபுரங்களைக் கட்டுவதற்கு உத்தரவிட்ட ஆட்சி, கம்பீரமான உள்ளம் கொண்ட எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பூம்பாறை திருக்கோயிலுக்கும் இராஜகோபுரம் கட்டுவதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்படும். அந்தக் கோயிலைப் புனரமைப்பதற்குண்டான பணிகளையும் உடனடியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதி, தென்காசி நகரில் அமைந்துள்ள அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு விழா நடைபெற்றது. அதனால், இந்த ஆண்டு அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனி நாடார் அவர்கள் கோரிய அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலில், தொல்லியல் துறையின் அனுமதி மற்றும் மாநில வல்லுநர் குழு அனுமதி பெறப்பட்டு, சுமார் 15 பணிகள் ரூ.3.50 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்காமலேயே கூடுதலாக ரூ.1.65 கோடி செலவில் இராஜகோபுரப் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. அடுத்த முகூர்த்தத்தில் நிச்சயமாக அந்தத் திருப்பணிகள் தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்களும் அந்தத் திருப்பணியின்போது அழைக்கப்படுவார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

2023 அக்டோபர் 11]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிவிப்பை அளித்து, இந்தியாவில் முதல் மாநிலமாக, இலட்சோப இலட்ச வணிகர்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-30

சென்னையின் மையப் பகுதியான கோயம்பேடு பகுதியில் அமைந்துள்ள குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலுக்கு 5 நிலை இராஜகோபுரம் அமைக்க வேண்டுமென்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது கேட்டோம். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மேலும் அந்தத் திருக்கோயிலுக்கு பங்குனி உத்திரம், மகா சிவராத்திரி போன்ற திருநாட்களில் திருத்தேர் வேண்டுமென்று பக்தகோடிகள் கேட்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன். மேலும், அங்குள்ள தெப்பக்குளத்தையும் சீர்செய்து தருவாரா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலுக்கு ஒரு திருத்தேர் வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலேயே ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள். சுமார் 31 இலட்சம் ரூபாய் செலவில் அக்கோயிலுக்கான திருத்தேர் வழங்குவதற்கு ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. அதேபோன்று பசு மடம் வேண்டுமென்று கேட்டிருந்தார். அந்தப் பசு மடத்திற்கும் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், புதிதாக அன்னதானக் கூடம்*

வேண்டும் என்றும் கேட்டிருந்தார்கள். அன்னதானக் கூடத்திற்கும் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

வருகின்ற 25–10–2023 அன்று காலை 9–00 மணியளவில் இந்தப் பணிகள் அனைத்தும் துவங்குவதற்கான துவக்க விழா நடைபெறவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. பிரபாகரராஜா அவர்ளையும் அழைக்கவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதையும் தருகிறோம்; அவர்கள் கேட்காததையும் தருகிறோம்; உறுப்பினர்கள் கேட்டதையும், கேட்காததையும் தரக்கூடிய அரசு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு என்பதற்கு இது ஓர் உதாரணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரராஜா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

229—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***52429—திரு. வி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை ஊராட்சியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,